# தொல்காப்பியம், சங்க இலக்கியம் குறிப்பிடும் ஓரறிவு உயிரினங்கள் – ஒப்பீடு

*முனைவர் மா. சங்கரேஸ்வரி*
உதவிப்பேராசிரியர்
கோ.வெங்கடசுவாமி நாயுடு கல்லூரி
கோவில்பட்டி

மலர்: 4
இதழ்: 1
மாதம்: ஜூலை
வருடம்: 2019
ISSN: 2454-3993

## முன்னுரை

தொல்காப்பியர் உயிரினங்களின் தன்மை, பண்பு, அறிவு, உணர்வு இவற்றை நன்கு அறிந்திருந்தார். ஒவ்வொரு உயிரினங்களின் உணர்வுகளை அறிவு அடிப்படையில் மரபியல் என்னும் இயலில் விளக்கியுள்ளார். தொல்காப்பியர் உயிரினங்களின் பாகுபாட்டை அறிந்து உரைத்துள்ளார். தொல்காப்பியர் மட்டுமில்லாமல் சங்க இலக்கியப் புலவர்களும் தங்களின் புலமை மற்றும் அறிவுத்திறனை இலக்கியத்தில் வெளிப்படுத்தியுள்ளனர். இவற்றில் தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ள ஓரறிவு உயிரினங்கள், அவற்றின் உறுப்புக்கள் என்ன என்பதைச் சங்க இலக்கியத்தோடு ஒப்பிட்டு ஆய்வோம்.

## ஓரறிவு

உடம்பினால் அறியக்கூடிய உணர்வு உடைய உயிரினங்கள் ஓரறிவு உயிரினமாகும். இதனை,

**ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**

**(தொல்.பொருள்.மரபு.,571)**

என்ற நூற்பா அடியின் வழி அறியலாம். மேலும், ஓரறிவு உயிரினங்களின் உணர்வுகளைத் தொடுவுணர்வு அல்லது மெய்யுணர்வு என்றும் கூறுவர். மெய் என்பது உடம்பைக் குறிக்கின்றது. உடம்பின் வாயிலாக வெப்பம், தட்பம், வன்மை, மென்மை இவற்றின் தன்மைகளை அறிந்துணர முடியும். ஓரறிவு உயிரினங்கள் புல்லும், மரமும் ஆகும். இவற்றிற்கு வாய், செவி, மூக்கு, நாக்கு போன்ற புலன்கள் இல்லை. ஆதலால் புலன்களால் அறியக்கூடிய உணர்வு இவற்றிற்கு இல்லை. இதனை,

**"புல்லும் மரனும் ஓரறி வினவே**
**பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே**

**(தொல்.பொருள்.மரபு.572)**

என்ற நூற்பாவின் வழி அறியலாம். மேலும், பிறவும் என்பது கொட்டியும் தாமரை, கழுநீர் போன்ற நீரில் வாழக்கூடிய உயிரி னங்களையும் குறிக்கின்றது.

புல் எனப்படுவது புறவயிர்ப்பு உடையதாகும். அதாவது உள்ளே துளையுடைய தூம்பு தன்மையைக் குறிப்பது புறவயிர்ப்பாகும். இதனை,

**புறக் காழனவே புல் என மொழிப**

**(தொல்பொருள்.மரபு.630)**

என்ற நூற்பா எடுத்துரைக்கின்றது. அது மட்டுமின்றி தாமரை, அல்லி, ஆம்பல் போன்ற கொடியினத்தைச் சார்ந்த நீர்வாழ்த்தாவரங்களும் புறவயிர்ப்பு உடையனவாக இருக்கின்றன. இவற்றின் தண்டுகள் குழல் போல் துளையுடையதாகக் காணப்படுகின்றன. எனவே அவையும் ஓரறிவு சார்ந்த உயிரினங்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

மேலும், பிறவே உளவே அக்கிளைப் பிறப்பே என்பதால் புறக்காழன என்பது தெங்கு, பனை, கமுகு முதலியன புல் இனத்தைச் சார்ந்தனவாகும்.

புல் என்பது தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை, ஈர்க்கு, குலை போன்ற உறுப்புகளைக்கொண்டு விளங்குகின்றது. இதனை,

**தோடே மடலே ஓலை என்றா**
**ஏடே இதழே பாளை என்றா**
**ஈர்க்கே குலை என நேர்ந்தன பிறவும்**
**புல்லொடு வரும் எனச் சொல்லினர் புலவர்**

**(தொல்.பொருள்.மரபு.1586)**

என்ற நூற்பா எடுத்துரைக்கின்றது.

மரம் என்பது அகவயிர்ப்புடையவாகும். இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, புவே, அரும்பு, நனை போன்ற உறுப்புகளை உடையது மரமாகும். இதனை,

**"அகக் காழனவே மரம் என மொழிப"**

**(தொல்.பொருள்.மரபு.631)**

**"இலையே முறியே தளிரே கோடே**
**சினையே குழையே புவே அரும்பே**
**நனை உள்உறுத்த அனையவை எல்லாம்**
**மரனொடு வரூஉம் கிளவி என்ப"**

**(தொல்.பொருள்.மரபு.1587)**

**"காயே பழமே தோலே செதிளே**
**வீழோடு என்றாங்கு அவையும் அன்ன"**

**(தொல்.பொருள்.மரபு.1588)**

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

### புல்லின் உறுப்புகள்

### தோடு

மடல்களிலிருந்து மேலே உள்ள உறுப்புக்குத் "தோடு" என்று பெயர். இவற்றை இதழ், ஓலை என்று கூறுவர். பனை, தென்னை, தாழை ஆகியவற்றில் உள்ள கீற்றுக்களை "ஓலை" என்று கூறுவர். இவற்றால் சங்க காலத்தில் மக்கள் குடை செய்துள்ளனர். இதனை,

**உறைப்புழி ஓலை போல (புறம்.290:7)**

என்ற அடி உணர்த்துகின்றது.

தாழையின் இலையைக் குறிக்கவும் "தோடு" என்ற சொல் சங்க இலக்கியத்தில் கையாளப்பட்டுள்ளது. தாழை இலையில் முட்கள் பொருந்தியிருக்கும். இவை நீண்டு வாள் போல் இருக்கும். இவற்றைத் "தோடு" என்று கூறுவர். இதனை,

**எயிறுடை நெடுந்தோடு காப்ப (அகம்.130:6)**

என்ற அடி குறிப்பிடுகின்றது. தாழையின் இதழை நாரையின் சிறகுக்கு ஒப்பாகக் கூறுகின்றனர். இதனை,

**"வீழ்தாழ் தாழை ஊழுறு கொழுமுகை**
**குருகு உளர் இறகின், விரிபுதோடு அவிழும்"**

**(குறுந்.228)**

என்ற அடிகள் விளக்குகின்றன.

பனையோலையையும் "தோடு" என்று கூறுவர். இதனை,

**தோடும் தொடலையும் கைக்கொண்டு**

**(அகம்.138:12)**

என்ற அடி வழி அறியலாம்.

வெள்ளிய மணலின் கண் தழைத்த, அடிப்பகுதி திரண்ட பனையின் பசிய மடல் கருக்கின் உச்சியில் விளங்கும் வெண்குருத்து ஒலை என்பதை,

**வெண்மணற் பொதுளிய பைங்கால் கருக்கின்**
**கொம்மைப் போந்தைக் குடுமிவெண் தோட்டு**
***(குறுந்.281)***

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

வாழையின் பூவின் மேல் உள்ள தோலை தோடு என்று கூறுவர். இதனை,

**வாழை மென் தோடு வார்புறுபு ஊக்கும்**
***(நற்.400:1)***

என்ற அடி உணர்த்தும்.

**மடல்**

பனைமரத்தின் உச்சியில் உள்ள அரம் போன்ற கூர்மையுடைய கருக்கு களையுடையது மடலாகும். இவை நெடியனவாக இருக்கும். நெடிய மடல்கள் குருத்தொடு மறையுமாறு காற்று வீசியது. இதனை,

**பனைத் தலைக் கருக்குடை நெடுமடல் குருத்தொடு மாய**
**கடுவளி தொகுத்த நெடுவெண் குப்பை**
***(குறுந்.372)***

**"தூங்கல் ஓலை, ஓங்கு மடல் பெண்ணை**
**மாஅரை புதைத்த மணல் மலி முன்றில்"**
***(நற்.135)***

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. பனையின் கொழுவிய மடல்களுக்கிடையே பறவைகள் கூடுகட்டி வாழும் என்பதை,

**"முழவுமுதல் அரைய தடவுநிலைப் பெண்ணைக்**
**கொழுமடல் இழைத்த சிறுகோற் குடம்பை**
***(குறுந்.301)***

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன.

## இதழ்

இதழ் என்பது பூவின் இதழைக் குறிக்கின்றது. இவை அரும்பு விரிந்த நிலையில் இருக்கும். தாமரை, முருக்கம் (கவிர்), நீலம், ஆம்பல், அல்லி ஆகியவற்றின் இதழைக் குறிக்கும். இதனை,

**ஆய் இதழ்ப் பல் மலர் ஐய கொங்கு உறைத்தர**
***(கலி.29:8)***

**அரும்பு அவிழ் நீலத்து ஆய் இதழ் நாண**
***(கலி.85:15)***

**பிணிவிடு முருக்கு இதழ் அணி கயத்து உதிர்ந்து உக**
***(கலி.33:4)***

என்ற அடிகள் வாயிலாக அறியலாம்.

மேலும், போழ் என்பது தாழம் புவின் துண்டு இதழ்களைக் குறிக்கும். இதனை,

**போழ்இடை இட்ட கமழ் நறும் புங்கோதை**
***(கலி.55:3)***

என்ற அடி உணர்த்துகின்றது. அது மட்டுமின்றி இதழ் என்பது மலரையும் குறிக்கின்றது. நீலமலரைக் கண்ணுக்கு உவமையாகக் கூறுவதை,

**நீல் இதழ் உண்கணாய்** ***(கலி.33:28)***

என்ற அடி குறிப்பிடுகின்றது.

**குலை**

குழை என்பது தளிர்களைக் குறிக்கின்றது. காய்கள் காய்ப்பதற்குக் குழை தளிர்க்க வேண்டும். இவற்றின் வளர்ச்சிதான் காய் ஆகும். தென்னம், கமுகு, பனை, வாழை, மா போன்ற மரங்களில் காய்கள் கொத்துக் கொத்தாகத் தொங்குவதைக் 'குலை' என்று கூறுவர். இம்மரங்களில் காய்கள் ஒன்றுக்கு மேற்பட்டு கொத்துக்கொத்தாகக் காய்க்கும் தன்மையுடையன. காய்ப்பதற்காக உள்ள பருவத்தைக் குலை தள்ளியுள்ளது என்றும் கூறுவர். இதனை,

**"கோழிலை வாழைக் கோள் முதிர் பெருங்குலை**
**ஊழுறு தீம் கனி"**
***(அகம்.2:1 - 2)***

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

***அடை***

அடை என்ற சொல் இலை என்ற பொருளைத் தருகின்றது. நீர்நிலைகளில் வளரும் நெய்தல், தாமரை, அல்லி, குவளை

ஆகியவற்றின் இலைகளைக் குறிக்க அடை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனை,

***அடையொடு வாடிய அணிமலர் (கலி.3:9)***

***"தளை நெகிழ் பிணிநிவந்த பாசடைத் தாமரை" (கலி.59:1)***

***நெடுநீர் ஆம்பல் அடைப் புறத்தன்ன (குறுந்.352:1)***

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. அடை என்ற சொல் அகன்ற தன்மையுடைய இலையைக் குறிப்பதாகச் சங்க இலக்கியம் குறிக்கின்றது. யானையின் செவிக்கு உவமையாக நெய்தலின் இலையைக் குறிப்பிடுவர். யானையின் செவி அகன்ற தன்மையுடையது என்பதை,

***"அணி மிகு சேவலை அகல் அடை மறைத்தென" (கலி.70:2)***

***"பழற்கால் ஆம்பல் அகல் அடை நீழல்" (புறம்.266:3)***

***"களிற்றுச்செவி அன்ன பாசடை மயக்கி" (குறுந்.246:2)***

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன.

மேலும், அடகு என்ற சொல்லும் இலையைக் குறிக்கும். இவ்விலையைக் கீரை என்று கூறலாம். முஞ்ஞை மற்றும் முன்னைக் கீரை வகைகளில் உள்ள இலையை "அடகு" என்ற சொல் குறிப்பதை, என்ற அடிகள் வழி அறியலாம்.

***பாசடகு மிசையார், பனிநீர் மூழ்கார் (புறம்62:14)***

***குறு நறு முஞ்ஞைக் கொழுங் கண் குற்றடகு (புறம்.197:11)***

### மரத்தின் உறுப்புகள்

### தாள்

மரத்தின் உறுப்புகளைப் பற்றி தொல்காப்பியர் மரபியலில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் மரத்தின் அடிப்பகுதியைப் பற்றி தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. சங்க இலக்கியத்தில் புலவர்கள் மரத்தின் அடிப்பகுதியை "தாள்" என்று கூறுகின்றனர். இது மரத்தின் ஓர் உறுப்பாகும். இதனை,

***முதிர் இணர் ஊழ்கொண்ட முழவுத்தாள் எரி வேங்கை (கலி.44:4)***

என்ற அடி வழி அறியலாம்.

### இலை

மரத்தில் உள்ள கிளைகளில் இருந்து தோன்றுவது இலையாகும். இலைகளின் மூலமாக மரம் நீராவி செய்யும் தன்மையுடையது. வேம்பு, நெல்லி ஆகியவற்றின் இலை சிறிய அளவுடையதாகும். இதனை,

***"சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது" (புறம்.91:9)***

***"நீலத் தன்ன பாசிலை யகந்தொறும்" (நற்.249)***

***"மின்னிலைப் பொலிந்த விளங்கிண ரவிழ்பொற்" (அகம்.80)***

என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.

### முறி

முறி என்பது இலை, தளிர் இவற்றைக் குறிக்கின்றது. பேச்சு வழக்கில் இவற்றைக் "கொழுந்து" என்று கூறுவர். விளாமரத்தின் சிறிய தளிரைக் கிள்ளி எடுத்து முருகனை நினைத்து ஒருவர் மேல் ஒருவர் அத்தளிர் படும்படி விரலால் தெறித்து மக்கள் விளையாடினார்கள் என்பதை,

***வெள்ளில் குறுமுறி கிள்ளுபு தெறியா (திருமுருகு.37)***

என்ற அடி உணர்த்துகின்றது. கொன்றையின் தளிர் பொன் போன்ற நிறமுடையது என்பதை,

**முறிஇணர்க் கொன்றை நன்பொன் கால**
**(முல்லை.94)**

என்ற அடி உணர்த்துகின்றது.

பொரி போன்ற புக்களையுடைய புன்கினது அழகுமிக்க தளிரை மகளிர் தங்களின் மார்பில் அணிவது வழக்கமாகும். இதனை,

**"பொரிப்பும் பன்கின் அழற் தகை ஒண் முறி சுணங்குஅணிவனமுலைஅணங்குகொளத்திமிரி"**
**(நற்.9:5)**

**"எழில் தகை இள முலை பொலியப்**
**பொரிப்பும் புன்கின் முறி திமிர் பொழுதே"**
**(ஐங்.347:2 - 3)**

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. ஞாழல், காஞ்சி, புன்னை போன்ற மரங்களில் முறி விடுவதை, (நற்.106:8), (புறம்344:6) என்ற பாடல்டிகள் வழி அறியலாம். குரங்குகள் தளிரை உண்ணும் தன்மையுடையன. இதனை,

**"மந்திக் காதலன் முறி மேய் கடுவன்"**
**(ஐங்.276:1)**

**"முறி ஆர் பெருங் கிளை அறிதல் அஞ்சி,**
**கறி வளர் அடுக்கத்து, களவினில் புணர்ந்த"**
**(நற்.151:5 - 6)**

என்ற அடிகள் விளக்குகின்றன.

## கோடு

கோடு என்பது "உச்சி" என்ற பொருளைத் தருகின்றது. சங்க இலக்கியத் தில் மரம், மலை போன்றவற்றின் உச்சியைக் குறிக்க "கோடு" என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. புன்னை மரத்தின் உச்சியைக் கோடு என்று குறிப்பதை,

**"கருங்கோட்டுநறும்புன்னைமலர்சினைமிசைதொறும்"**
**(கலி123:1)**

என்ற அடி வழி அறியலாம்.

## சினை

சினை என்பது மரத்தின் கிளையைக் குறிக்கும் உறுப்பாகும். சங்க இலக்கியங்கள் பெருஞ்சினை, மென்சினை, அம்சினை, பல்சினை என்று சினைக்குப் பல்வகை அடை மொழியிட்டுக் குறிப்பிடுகின்றன. கிளைகளின் தன்மையைப் பொறுத்து இவ்வாறு அழைக்கப்படுகின்றது. ஞாழல், வெண்கடம்பு, வேங்கை, யாமரம், ஓமை மரம், காஞ்சி ஆகிய மரங்களின் கிளைகளைக் குறிக்கும் போது இச்சொற்கள் கையாளப்படுகின்றன. இதனை,

**வேனில் அம்சினை கமழும் (குறுந்.22:4)**

என்ற அடி புலப்படுத்துகின்றது.

## அரும்பு

மரம், செடி, கொடி ஆகிய தாவரங்களில் உள்ள ஓர் உறுப்பு அரும்பாகும். அரும்பு என்பதற்கு முகை, மொட்டு, முகிழ், போது என்ற பல்வகைப் பெயர்கள் உண்டு. மலர்கள் மலரும் பருவநிலையில் உள்ளதை "அரும்பு" என்று கூறுவர். இதனை,

**மணி துணர்ந்தன்ன மாக்குரல் நொச்சி**
**போது விரி பல் மரனுள்ளும் (புறம்.272)**
**அரும்பு அலர் செருந்தி (புறம்390:3)**

என்ற அடிகள் எடுத்துரைக்கின்றன.

## நனை

மரத்தின் அரும்புகளை "நனை" என்று கூறுவர். இவற்றைப் பசுநனை, நனைமுதிர் என்று குறிப்பிடுவர். சங்க காலத்தில் கள்ளில் பூ முகை சேர்ப்பதுண்டு. கள்ளுக்கு மணம் சேர்க்கும் பொருட்டு இவை இடம்பெறும். இதனை,

**"தான் தர உண்ட நனை நறவு மகிழ்ந்து"**
**(பதி.40:19)**

என்ற அடி விளக்குகின்றது.

## முடிவுரை

தொல்காப்பியர்மரபியலில்குறிப்பிட்டப்படி சங்க இலக்கியங்களில் இடம்பெறும் ஓரறிவு உயிரினங்களில் புல்லும், மரமும் ஆகும் என்றும் இவற்றின் உறுப்புகள் என்ன என்பது பற்றியும் இக்கட்டுரை விளக்கியுள்ளது.